23.07.2026



<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.**137/2017**</u>

<u>பி.வா.சா. **2-**சந்திரசேகரன், த/பெ.ரெங்கராஜூலு</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1981 ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திரப்படி வடபுறம் ராமசாமிக்கும், தென்புறம் அழகிரிசாமி, ரெங்கராஜ்க்கு பாகம் ஒதுக்கப்பட்டது. ராமசாமி துறையூரில் தான் இருந்தார். அழகிரிசாமி ராமசாமியின் பாக சொத்தை பாகம் பிரிக்க வேண்டும் என வழக்கு தொடர்ந்தார். இந்த ராமசாமியின் பாகத்தை பிரிக்க வழக்கு தாக்கல் செய்திருந்தபோது 1981 ம் ஆண்டு பாகப்பத்திரப்படி தென்புறம் பாகம் பிரிக்கப்பட்டதாக வழக்கில் சொல்லியிருந்தாரா என்றால் சொல்லியிருந்தார்கள். இந்த அழகிரிசாமி தாக்கல் செய்த வழக்கு 1988 ம் ஆண்டு முடிவுபெற்றது. நான் சாட்சியம் அளித்தவாறு அழகிரிசாமி வழக்கு தாக்கல் செய்த போது ராமசாமியின் தென்புறம் சொத்து பிரிவினை செய்து கொண்டதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 05.04.2017 ம் தேதி வாதிகளுக்கு வழக்கறிஞர் அண்ணாமலை மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான், அந்த அறிவிப்பு தான் இது என கற்றறிந்த வாதி வழக்கறிஞர் அந்த அறிவிப்பை காண்பித்த போது சாட்சி இது தான் ஒப்புக்கொள்கிறார்,

23.07.2026



இந்த அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.40** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்தவா.சா.ஆ.40 அறிவிப்பை அனுப்பு வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் தெரிவித்தேன். இந்த வா.சா.ஆ.40 அறிவிப்பில் தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்க வேண்டும் என பாகம் கோரி அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து வாய்க்காரராக ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டதாக கூறியிருப்பது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.40 அறிவிப்பில் ஏற்கனவே வாய்க்காரராக பிரிக்கப்பட்ட சொத்திற்கு பாகம் கோரி அனுப்பப்படவில்லை, ஏற்கனவே வாய்க்காரராக பிரிக்கப்படாத சொத்தை தான் வா.சா.ஆ.40 அறிவிப்பை அனுப்புனீர்கள் என்று சொன்னால் தவறு. வா.சா.ஆ.40 அறிவிப்பிற்கு பிறகு தாவா சொத்தை பொறுத்து எனக்கும், வாதிக்கும் பிரிவினை எதுவும் ஏற்பட்டதா என்றால் பாகம் ஏற்படவில்லை, ஆனால் பாகம் கேட்கும் போது தான் இந்த பிரச்சனை வந்தது. அதே வழக்கறிஞர் திரு. அண்ணாமலையை வைத்து தாவா சொத்து சம்மந்தமாக வாதிகள் மீது எதிர்பார்ப்பு மனு மாண்புமிகு சார்பு நீதிமன்றம், துறையூர் மற்றும், துறையூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த மனுவின் வாதிக்கு அனுப்பப்பட்ட நீதிமன்ற நோட்டீஸ் மற்றும் மனு ஆகிய ஆவணங்களை கற்றறிந்த வாதியின் வழக்கறிஞர் சாட்சியிடம் காண்பித்து சாட்சி இது தான் என ஒப்புக்கொண்டார்**,** அவை வா**.**சா**.**ஆ**.41** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் பிறகு வழக்கறிஞர் திரு.மலர்முகிலன் மூலம் மீண்டும் வாதிகளுக்கு எதிராக எதிர்பார்ப்பு மனுவை துறையூர், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்தேன் என்றால் சரிதான், அந்த மனுவின் வழக்கறிஞர் அறிவிப்பு நகல் மூன்று எண்ணிக்கையானது இது தான் என கற்றறிந்த வாதி வழக்கறிஞர் சாட்சியிடம் காண்பித்து சாட்சி இது தான் என ஒப்புக்கொள்கிறார்**,** அந்த அறிவிப்பு வா**.**சா**.**ஆ**.42** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழகிரிசாமி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு படி பாகம் பிரிக்கப்படவில்லை, அதன்பிறகு வா.சா.ஆ.40 அறிவிப்பு படியும் பாகம் பிரிக்கவில்லை, எனவே தாவா சொத்தை பாலசுப்பிரமணியன் கிரையம் கொடுங்கள் நாங்கள் பார்த்து கொள்கிறேன் என சொன்னதின் பேரில் நான் பாலசுப்பிரமணியனுக்கு கிரையம் கொடுத்தேன் என்று சொன்னால் அது தவறு. பாகம் பிரிக்காமல் பாலசுப்பிரமணியத்திற்கு எதன் அடிப்படையில் கிரையம் கொடுத்தீர்கள் என்றால் என் தகப்பனார் பாகம் பிரிக்கப்பட்டதாக சொன்னதின் பேரில் கிரையம் கொடுத்தேன். வா.சா.ஆ.40 அறிவிப்பில் தாவா சொத்துக்களில் பாகம் பிரித்த விவரத்தை சொல்லி தான் கொடுத்தேன். வா.சா.ஆ.40 அறிவிப்பிற்கு வாதிகள் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பப்படவில்லை. வாதிகள் சச்சரவு செய்ததால் அந்த வில்லங்கத்தை நிவர்த்தி செய்து அதன்பிறகு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் தவறு, ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டது.

ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் பாகம் பிரிக்கவில்லை, நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. ஏற்கனவே நீதிமன்றத்தின் மூலம் பாகம் பிரிந்திருந்தால் வாய்க்காரர் மூலம் சொத்தினை பாகம் பிரிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் தவறு. என் தகப்பனார் நீதிமன்ற ஆணையர் மூலம் பாகம் பிரித்து கொள்ளலாம் என்று தான் சொன்னார். பாகம் பிரிபடாத சொத்தை தான் வாய்க்காரராக பாகம் பிரிந்ததாக பொய்யாக சொல்லி கிரையம் எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னால் தவறு. நான் எழுதிக்கொடுத்த கிரையத்தை முன்னின்று ஏற்பாடு செய்த பாலசந்திரன் இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அழகிரிசாமி தாக்கல் செய்த வழக்கில் அழகிரிக்கு மாணிக்கம் மட்டும் தான் வாரிசு என வழக்கில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து எந்த காலத்திலாவது வீட்டுவரி ரசீது ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதிகள் தாவா வீட்டில் இருந்ததால், வீட்டுவரி ஏற்படவில்லை, வீட்டுவரி ஒரே பேரில் தான் இருந்தது. இந்த வழக்கு நடந்த காலத்தில் தாவா சொத்து ஓட்டுவில்லை கோப்பாக இருந்ததாக என்றால் சிதரமடைந்ததாக இருந்தது. இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது தாவா சொத்தில் உள்ள ஓட்டை யாரும் பிரிக்கவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்வதாற்கு முன்பு எந்த அமைப்பில் இருந்ததோ அப்படியே தான் இருந்தது, எந்த அபிவிருத்தியும் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவாசொத்து தென்மேற்கு மூலையில் உள்ள அறை குளியலறை என்று சொன்னால் சரியல்ல, தங்கும் அறை அங்கு தான் சமைத்து சாப்பிடுவோம். நானோ என் தகப்பனாரோ ஒரு காலத்திலும் தாவா சொத்து அந்தஅறையில் இருந்தது கிடையாது என்று சொன்னால் தவறு. தாவாசொத்து தென்மேற்கு மூலையில் உள்ள அறை கழிவறை, குளியலறை என்று சொன்னால் தவறு. நான் கிரையாவணத்தில் கிரையம் செய்வதற்கு முன்பு வா.சா.ஆ.40 அறிவிப்பு அனுப்பியுள்ளதால் பாகம் பிரிக்கப்படவில்லை என்ற விவரம் அந்த கிரையாவணத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் வழக்கு நோட்டீஸ் உள்ளது போன்ற விவரங்களை சொல்லி தான் கொடுத்தோம். நான் ரெங்கராஜுலு சொத்தை தனிப்பட்ட முறையில் பானுமதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் தவறு. பானுமதி சொத்தை கிரையம் வாங்கவில்லை, விவகாரத்தை தான் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் தவறு. நான் விவகாரம் உள்ள சொத்தை விற்பனை செய்ததற்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. வாதி சொத்தை எனக்கு பிரித்து கொடுக்கவில்லை, அனுபவிக்கவும் இல்லை என்று சொன்னால் சரிதான். தாவா முழு சொத்திலும் வாதி குடியிருந்த நிலையில் விவகாரம் உள்ள நான் எழுதிக்கொடுத்த கிரையாவணத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் தொந்தரவு செய்ததால் தாவாசொத்தில் உள்ள அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்று தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் பானுமதிக்கு கிரையம் பத்திரம்

23.07.2026



எழுதிக்கொடுக்கும் போது தாவா சொத்து சம்மந்தமாக ஈட்டுக்கடன் பத்திரம் எழுதப்பட்டிருந்தா என்றால் இருந்தது, என்னுடைய சொத்தும் எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு என்னுடைய சொத்தும் சேர்த்து ஈட்டுக்கடன் பத்திரம் எழுதப்பட்டதை எதிர்த்து சட்ட நடிவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் ஏற்படுத்திய விவகாரம் பத்திரத்திற்கு ஆதரவாக விவகாரமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் தவறு. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய பாகத்தை மட்டும் தான் கிரையம் செய்து கொடுத்தேன்.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.